DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>(Chapter.. | ... | DEPOSITION OF WITNESS |
| Preliminary Register | ... | Case No. Spl.C.C.No.3/2019 |
| Sessions | ... | |
| Deposition of witness for | | Prosecution - P.W.4<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | செல்வி.உமாசித்ரா |
| Father's Name | த/பெ.ஜேக்கப் |
| Village | |
| Taluk | |
| Age | 66 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.04.2025.

**(எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை :–**

1.நான் தூத்துக்குடி சாயர்புரத்திலுள்ள ஜி.யு.போப் கல்வியியல் கல்லூரியில் முதல்வராக 2017 ம் ஆண்டு முதல் தற்போது வரை பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு தென்காசி மஞ்சம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து 2016 ம்ஆண்டு ஓய்வு பெற்றேன். நான் பணிபுரிந்த ஜி.யு.போப் கல்லூரியில் நான் 2017 ம் ஆண்டு சேரும்போது திரு.ராஜேஷ்ரவிசந்தர் என்பவர் தாளாளராக இருந்தார். அதன்பின்பு தாளாளராக திருமதி.கிறிஷ்டோபல் ஆனந்த்

என்பவர் இருந்தார். அவர் சென்னையில் இருந்தார். நான் கல்லூரியில் நிர்வாகம் சம்பந்தமாக சான்றிதழ் பெறுவதற்கு விண்ணப்பம் அனுப்ப தாளாளர் இல்லாத சமயத்தில் தாளாளருக்காக நான் கையெழுத்து செய்து அனுப்புவேன். நான் பணிபுரிந்த காலத்தில் 2017 ம் ஆண்டு Supporting Staff ஆக திரு.ஜெயக்குமார் என்பவர் பணிபுரிந்து வந்தார். மேலும் கல்லூரி சம்பந்தப்பட்ட அங்கீகாரம் மற்றும் அது சம்பந்தப்பட்ட லைசென்ஸ், Stability Certificate, Sanitory Certificate ஆகிய Certificates வாங்குவதற்கு சம்பந்தப்பட்ட அரசு அலுவலகம் சென்று அலுவலர்களை சந்திக்க அவருக்கு நாங்கள் அதிகாரம் கொடுத்தோம். இது சம்பந்தமாக எங்கள் கல்லூரியில் பராமரிக்கப்படும் Office Staff Circular பதிவேட்டின் 19.10.2018 அன்று உள்ள குறிப்பில் அதிகாரம் கொடுக்கப்பட்டதற்கு பதிவுகள் மேற்கொண்டு கையொப்பம் இட்டுள்ளேன். மேற்படி Office Staff Circular பதிவேடு **அ.சா.ஆ.14.** மேற்படி பதிவேட்டில் பக்கம் எண்.24 ல் 19.10.2018 தேதியிட்ட குறிப்பில் மேற்படி ஜெயக்குமாருக்கு அதிகாரம் கொடுத்த பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.எங்கள் கல்லூரியில் அங்கீகாரம் Tamilnadu Teachers Education University ல் புதுப்பிக்கப்படவேண்டும். மேற்படி அங்கீகாரமானது 2018-2019 ம் ஆண்டு புதுப்பிக்கப்படவேண்டியிருந்தது. அதனை புதுப்பிப்பதற்கு அதனுடன் இணைப்பு ஆவணமாக துணை இயக்குநர், சுகாதார பணிகள் அவர்களிடமிருந்து சுகாதார சான்று பெறப்படவேண்டும். அதன்படி கடந்த 07.09.2018 ம் தேதி தூத்துக்குடி சுகாதார பணிகள் துணை இயக்குநர் அவர்களுக்கு எனது மூலமாக விண்ணப்பம் அனுப்பப்பட்டது. அதனுடன் அதில் குறிப்பிடப்பட்ட இணைப்பு ஆவணங்கள் அனுப்பப்பட்டிருந்தது. அந்த விண்ணப்பமானது ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. எங்கள் விண்ணப்பத்தின் அடிப்படையில் தூத்துக்குடி சுகாதார பணிகள் துணை இயக்குநர் அவர்கள் கூடுதலாக 2 சான்றிதழ் இணைத்து அனுப்பச்சொல்லி அந்த விண்ணப்பத்தினை 7 நாட்களுக்குள் சமர்ப்பிக்கும்படி ஏரல் ஆரம்ப சுகாதார வட்டார சுகாதார மேற்பார்வையாளரை அறிவுறுத்துமாறு அவரது கையெழுத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி கூடுதல் சான்றுகளை இணைத்து மீண்டும் அனுப்பி வைத்தோம். அவ்வாறு சான்றுகளை இணைத்து விண்ணப்பத்தினை திரு.ஜெயக்குமார் அவர்கள் மூலமாக அனுப்பி வைத்தோம். அவ்வாறு நான் அனுப்பி வைத்த 05.10.2018 தேதியிட்ட கடிதம்தான்(இணைப்புகளுடன் கூடியது.) தற்போது நான் பார்வையிடுவது. அது அ.சா.ஆ.15.(இணைப்புகளுடன் கூடியது.)

3.பின்னர் எங்கள் கல்லூரியில் சுகாதார துணை இயக்குநர் அவர்கள் ஏரல் வட்டார சுகாதார மேற்பார்வையாளர் ஆய்வு மேற்கொண்ட விவரத்தை தெரிவிக்குமாறு அனுப்பிய கடிதம் எங்களுக்கு வரப்பெற்றது. அதுவரை எங்கள் கல்லூரியில் யாரும் ஆய்வு மேற்கொள்ளாத காரணத்தினாலும் 30.10.2018 க்குள் எங்கள் கல்லூரியின் அங்கீகாரத்தை புதுப்பிப்பதற்கு விண்ணப்பிக்க கடைசி நாள் என்பதால் திரு.ஜெயக்குமாரிடம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பார்த்து சான்று பெற ஆவண செய்யுமாறு கூறினேன்.

4.பின்னர் சுகாதார பணி துணை இயக்குநர் திருமதி.கீதாராணி அவர்கள் எங்கள் கல்லூரியை ஆய்வு செய்துவிட்டு சென்றார்கள். அவ்வாறு ஆய்வுக்காக வரும் நபர்கள் எங்கள் கல்லூரியின் Visitors பதிவேட்டில் பதிவு செய்வார்கள். அவர் வருவதற்கு 1 வாரம் முன்பு திரு.குமாரவேல் சுகாதார ஆய்வாளர் அவர்கள் எங்கள் கல்லூரியில் வந்து

பார்வையிட்டார்கள். எங்கள் கல்லூரியில் பராமரிக்கப்பட்டு வந்த பார்வையாளர் பதிவேடு 2015-2018ம் ஆண்டுக்குரியது நான் தற்போது பார்வையிடுவது. **அது அ.சா.ஆ.16.** அதில் பக்கம் 33ல் 27.11.2018ல் டாக்டா.கீதாராணி எங்கள் கல்லூரிக்கு வந்த விவரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. நாங்கள் எங்கள் கல்லூரியின் சுகாதார சான்று வேண்டி விண்ணப்பித்த காலத்தில் திரு.ஆழ்வாரப்பன் அவர்கள் ஏரல் சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்து வந்தார். பின்னர் ஜெயக்குமார்தான் மேற்படி பணிகளை மேற்கொண்டு வந்தார். 2018ம்ஆண்டு நவம்பர் மாதத்தில் திரு.ஜெயக்குமாரிடம் ரொம்ப நாள் ஆனதால் சான்றிதழ் என்ன ஆனது என நான் கேட்டதற்கு ஆஜர் எதிரி ஆழ்வாரப்பன் அதற்கு பணம் கேட்டதாக என்னிடம் கூறினார். அவ்வாறு பணம் கேட்ட விவரத்தை எங்கள் கல்லூரியின் தாளாளர் திரு.ராஜேஷ் என்பவரிடமும கூறியுள்ளார். அதன்பிறகு திரு.ராஜேஷ் கூறிய அறிவுரைகளின்படி நான் செயல்பட போவதாகவும் ஜெயக்குமார் என்னிடம் கூறினார். அதன்பிறகு ஒருநாள் காலையில் நான் கல்லூரிக்கு சென்றபோது எதிரி திரு.ஆழ்வாரப்பனை லஞ்சம் வாங்கியதாக பிடித்துவிட்டார்கள் என்று தெரியவந்தது. பின்னர் இதுசம்பந்தமாக காவல்துறையினர் என்னை விசாரித்தபோது தற்போது நான் அடையாளம் காண்பித்த ஆவணங்களை காவல்துறையினர் கேட்டுக்கொண்டதன்பேரில் காவல்துறையினர் வசம் ஒப்படைத்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -</u>

1.ஆஜர் எதிரியை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு தெரியும். சம்பவத்தன்று எதிரி எந்த ஊரில் என்னவாக பணிபுரிந்தார் என்றால் ஏரலில் சுகாதார ஆய்வாளராக (Sanitory Inspector) பணிபுரிந்தார்.

இவ்வழக்கில் புகார்தாரர் யார் என்றால் ஜெயக்குமார். அப்போது ஜெயக்குமார் என்ன வேலை பார்த்துக்கொண்டிருந்தார் என்றால் எங்கள் கல்லூரியில் Supporting Staff ஆக வேலை பார்த்துக்கொண்டிருந்தார்.

2.எதற்காக திரு.ஜெயக்குமாரை நான் எதிரியிடம்அனுப்பி வைத்தேன் என்றால் கல்லூரி சம்பந்தப்பட்ட அனைத்து சான்றுகளையும் பெறுவது அவர்தான். ஜெயக்குமார் என்ன சான்றிதழ் பெறுவதற்காக எதிரியை சந்தித்தார் என்றால் சுகாதார சான்று (Sanitary Certificate) பெறுவதற்காக சந்தித்தார். மேற்படி சான்றிதழை எதிரி நேரடியாகத்தான் வழங்க வேண்டுமா அல்லது தபால் மூலமாக அனுப்பலாமா என்றால் தபால்மூலமாகக்கூட அனுப்பலாம். ஆனால் ஜெயக்குமார் பலமுறை எதிரியை நேரில் சென்று சந்தித்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். சான்றிதழை நான் சமர்பிக்க கடைசி நாள் அருகில் இருந்ததால்நான் ஜெயக்குமாரிடம் பலமுறை சான்றிதழ் குறித்து கேட்கும்போதெல்லாம் அவர் சென்ற ஆஜர் எதிரியை சந்தித்து கேட்பது வழக்கம்.

3.நான் சான்றிதழ் கேட்டு எந்த தேதியில் கடிதம் அனுப்பினேன். அதில் எந்த தேதிக்குள் சான்றிதழ் அனுப்பவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தேன் என்றால் பல ஆண்டுகள் ஆகிவிட்டதால்தேதி விவரங்கள் தற்போது ஞாபகமில்லை. நான் அனுப்பிய ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும். 09.10.2018 அன்று எதிரி ஆழ்வாரப்பன் ஏற்கனவே எனக்கு தபால் மூலமாக ஒரு அறிக்கை அனுப்பியிருந்தார் என்றால் அவ்வாறு எதுவும் அனுப்பவில்லை. ந.க.எண்.4252/அ2/2018 அன்றையதினம் J.கல்யாண்ராம் பிளாக் மெடிக்கல் ஆபிஸர் ஏரல் Health Centre அவர்கள் துணை இயக்குநர் சுகாதார பணிகளுக்கு அனுப்பிய கடித விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது குறித்த விவரங்கள் எதுவும்

எனக்கு தெரியாது. அந்த கடிதத்தில் எதிரி கொடுத்த அறிக்கையும் இணைக்கப்பட்டு அனுப்பப்பட்டிருந்தது என்றால் தெரியாது.

4.குமாரவேல் என்பவர் சம்பவத்தின்போது என்ன பணியில் இருந்தார் என்றால் குறிப்பாக தெரியாது. எதிரி குறிப்பிட்ட இடத்தை பார்வையிட்டதே கிடையாது என்றும் ஆனால் வேண்டுமென்றே அந்த இடத்தை பார்வையிட்டதாக ஜெயக்குமார் கூறியுள்ளார் என்றால் அந்த விவரம் குறிப்பாக எனக்கு தெரியாது. ஆனால் ஆஜர் எதிரி பலமுறை அதற்கு முன்பாகவே எங்கள் கல்லூரிக்கு வந்துள்ளார். எங்கள் கல்லூரி வருகை பதிவேட்டில் யார் யார் பார்வையாளர்களாக உள்ளே வருகிறார்கள் எதற்காக வருகிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் யார் யார் வருகிறார்கள் என்ற விவரம் குறி,ப்பிடப்பட்டிருக்கும் எதற்காக வருகிறார்கள் என்ற விவரம் எதுவும் குறிப்பிடுவது கிடையாது.

5.Office Staff Circular Register யாரால் பராமரிக்கப்படும் என்றால் அலுவலகத்தில் உள்ள Record Clerk ஆல் பராமரிக்கப்படும். இவ்வழக்கில் கூறப்படும் சம்பவத்திற்கு முன்பாக கல்லூரி தூய்மையாக இல்லை என்ற விவரம் மேற்படி அந்த பதிவேட்டை பார்வையிட்டால் தெரியவரும் என்றால் சரியல்ல. கல்லூரி தூய்மையாகத்தான் பராமரிக்கப்பட்டு வந்தது. மேற்படி பதிவேட்டை பார்வையிட்டாலே டெங்கு ஏற்படக்கூடிய அளவிற்கு கல்லூரி வளாகம் முறையாக பராமரிக்கப்படவில்லை எனவும் அது சம்பந்தமான பணிகள் குறிப்பிட்ட ஒரு ஊழியருக்கு ஒதுக்கப்பட்ட விவரமும் துலங்கும் என்றால் சரியல்ல. ஆகவேதான் 09.10.2018 அன்றே எதிரி சுகாதார சான்று வழங்க இயலாது என ஒரு அறிக்கை துணை இயக்குநர் சுகாதார பணிகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டது என்றால் அது பற்றிய விவரங்கள் எதுவும் எங்கள் கலலூரிக்கு வரவில்லை.

6.சான்று வழங்குவதற்கு எதிரி பணம் கேட்டார் என்ற விவரம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. திரு.ஜெயக்குமார் வந்து என்னிடம் கூறியவகையில்தான் எனக்கு தெரியும். அதன்பிறகு எதிரி மீது ஜெயக்குமார் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க செல்கிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் அப்போது தெரியாது. பொறிவைப்பு நடவடிக்கை குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை -** இல்லை.

ஒம்/-P.V.வஷீத்குமார்,
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**